பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 05 | புதன்கிழமை | 19.03.2025 | அதிர்வு 226

## பட்டலந்த அறிக்கை: அடுத்த கட்டம் என்ன?

### அநுர அரசு விளக்கம்

“பட்டலந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கையை அரசு தீர்மானிக்கப் போவதில்லை. மாறாக சட்ட

06





## பேராயரின் ஆதங்கம் நியாயமானது

# ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்!

### அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த உறுதி



“பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் ஆதங்கம் நியாயமானது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகள் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்.”

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று தெரிவித்தார்.

06



## அரச செலவில் தனிப்பட்ட பயணம் மேற்கொள்ளவில்லை

### ரணில் தரப்பு விளக்கம்



அரச செலவில் எந்தவொரு தனிப்பட்ட பயணங்களையும்

06

## வடமராட்சியில் நேற்று ஆணின் சடலம் மீட்பு!

### அடையாளம் காணப்படவில்லை


(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வடமராட்சியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நெல்லியடி, புறாப்பொறுக்கி, ஆலடி எரிபொருள் நிலையத்துக்கு அண்மையாக உள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் 65 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் காணப்பட்டமை தொடர்பில்

06






புது விதமான நிர்வாக முறைமை ஒன்றை புதிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஆரம்பித்திருக்கிறார்.

தேசிய மட்டத்தில் பாதுகாப்புத் துறையினரை சந்திப்பதுதான் ஜனாதிபதிகளின் வழக்கம்.

மாகாண அல்லது மாவட்ட ரீதியில் அரச திணைக்கள நிர்வாகிகளை மாவட்ட மற்றும் மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடுவது வழமை. ஆனால் பாதுகாப்புத் துறையினரைப் பொறுத்தவரை முப்படையினர் மற்றும் பொலிஸாரின் தேசிய மட்டத் தலைமைகளோடுதான் ஜனாதிபதி நேரடியாகக் கலந்துரையாடி, பேசி, ஊடாடி, உத்தரவுகளை வழங்கி, நடவடிக்கைகளை எடுப்பார்.

முதல் தடவையாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பொலிஸாரை மாகாண மட்ட ரீதியில் சந்திக்கத் தொடங்கி இருக்கிறார்.

நேற்று மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணப் பொலிஸ் அதிகாரிகளை தனித்தனியாக அவர் சந்தித்து பேசி உள்ளார்.

06









## வடக்கு மாகாணத்தில்

# சுகாதாரத்துறையில் முப்பது வருடங்களாக ஆளணி மறுசீரமைப்பு நடைபெறவில்லை!

### ஆளுநர் தலைமையிலான சந்திப்பில் சுட்டிக்காட்டு

வடக்கு மாகாணத்தில் சுகாதாரத்துறையில் 3 தசாப் தங்களாக ஆளணி மறுசீரமைப்பு நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் வடக்கில் அமைக்கப் பட்டுள்ள 4 சிகிச்சை நிலையங்களின் செயற்பாடுகளையும் வினைத்திறனுடன் இயங்கவைப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன்போதே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை, கிளிநொச்சி மாவட்ட மருத்துவ மனை, மாங்குளம் ஆதார மருத்துவமனை, வவுனியா மாவட்ட மருத்துவமனை ஆகியனவற்றில் விசேட சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை கடந்த காலங் களில் திறந்து வைக்கப்பட்டாலும் அவற்றின் தேவைப்பா டுகள் முழுமைப்படுத்தப்படாமையால் வினைத்திற னுடன் செயற்பட முடியாத நிலைமை காணப்படுகின் றது.

ஆளணிப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சவாலாக இருப்பதாக இந்தக் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டதுடன் அவற்றை எவ்வாறு தீர்த்து இவற்றை இயங்க வைக்கலாம் என்பது தொடர்பில் ஆராயப்பட்டது. அதேபோன்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரை யாடப்பட்டது.

3 தசாப்தங்களாக வடக்கு மாகாணத்தில் சுகாதாரத்துறை யில் ஆளணி மறுசீரமைப்பு நடைபெறவில்லை என்றும், இதனைக் கருத்தில்கொண்டு ஆளணி மறுசீரமைப்பு, வெற்றிட மாகவுள்ள ஆளணிகளை நிரப்புவதற்கு மத்திய சுகாதார அமைச்சைக் கோருவதற்கும் இந்தக் கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.



கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிலுள்ள பெண்கள் சுகாதாரப் பராமரிப்புக்கான சிறப்பு சிகிச்சை நிலையத்தை இயங்கச் செய்வதற்கான நிதிக்கான வாய்ப்புக்களை எவ்வாறு உருவாக்கிக்கொள்வது என்பது தொடர்பாகவும் கலந்துரை யாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலா ளர், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பா ளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப் பாளர், வவுனியா மற்றும் மாங்குளம் மருத்துவமனைக ளில் பொறுப்பு மருத்துவ அத்தியட்சகர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி, முன்னாள் மருத்துவ பீடாதிபதி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந் தனர்.




# மட்டக்களப்பு பிள்ளையாரடியில் குடிமனைக்குள் புகுந்து கோழிகளைத் திருடி வந்த முதலை வசமாகப் பிடிபட்டது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பிள்ளையாரடி பிரதேசத்தில் ஊர்மனைக்குள் புகுந்த சுமார் 8 அடி நீளம் கொண்ட முதலை ஒன்றை மக்கள் மடக்கி பிடித்து கட்டிவைத்த சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை இரவு 10.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

பிள்ளையாரடி நாகையா வீதிப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் இரவு வேளைகளில் முதலை ஒன்று உட்புகுந்து அங்கு வளர்த்துவரும் கோழிகளை பிடித்து உண்டுவந்துள்ளது.

இந்த நிலையில் அந்தத் திருட்டு முதலையை பிடிப்பதற்காக வீட்டின் உரிமையாளர் முதலை உபட்புகும் பகுதியில் சுருக்கு வைத்திருந்திருக்கின்றார். முதலை நேற்று இரவு சுருக்கில் மாட்டிக் கொண்டதையடுத்து பொதுமக்கள் அதனை மடக்கி பிடித்து கட்டிவைத்ததுடன், வனவிலங்கு திணைக்களம் மற்றும் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.







# தக்காளி செய்கையில் ஒரு வகை வைரஸ் தாக்கம்

பதுளை மாவட்டத்தின் பல பகுதிகளில் பயிரிடப்படும் தக்காளி, ஒரு வகை வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த வைரஸ் தாக்கம் காரணமாக பயிர்ச்செய்கை முற்றிலும் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, வெலிமடை, ஊவாபரணகம, எல்ல, பண்டாரவளை மற்றும் ஹப்புத்தளை போன்ற பகுதிகளில் இவ்வாறு தக்காளி பயிர்ச்செய்கையானது வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த வைரஸ் தாக்கத்துக்குப் பல கிருமிநாசினிகளைப் பயன்படுத்தியும் அது பயனளிக்கவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தக்காளிகள் வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாக்கப்படும் பட்சத்தில் தக்காளி பயிர்ச்செய்கையினை கைவிட வேண்டிய நிலை ஏற்படும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# புற்றுநோயாளிகளுக்கு ஆர்முடுக்கி இயந்திரங்களை வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி

அதிகவலு கதிரியக்க சக்தியுடன் கூடியதும் உயரிய தரத்துடன் கூடியதுமான கதிரியக்க சிகிச்சை உபகரணங்கள் விநியோக கருத்திட்டத்தின் 2ஆம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்தார்.

புற்றுநோய் சிகிச்சை சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் 14 நேர்கோட்டு ஆர்முடுக்கி இயந்திரங்களை 02 கட்டங்களின் கீழ் விநியோகிப்பதற்கு 2013 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தின் நுடநமவய கம்பனிக்கும், சுகாதார அமைச்சுக்கும் இடையில் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த கருத்திட்டத்தின் ஐ ஆம் கட்டத்தின் கீழ் தேசிய புற்றுநோய் நிறுவகத்தின் 04 நேர்கோட்டு ஆர்முடுக்கி இயந்திரங்களும், கண்டி தேசிய மருத்துவமனைக்கு 02 இயந்திரங்களும், காலி தேசிய மருத்துவமனைக்கு 01 இயந்திரமும், மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு 01 இயந்திரமும், யாழ்ப்பாணம் தெல்லிப்பளை தள மருத்துவமனைக்கு 01 இயந்திரமுமாக மொத்தம் 09 இயந்திரங்கள் தற்போது தாபிக்கப்பட்டுள்ளன.

இலங்கை புற்றுநோய் நிபுணத்துவ மருத்துவ நிறுவகத்தால் சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகளைக் கருத்தில் கொண்டு இவை தாபிக்கப்படவுள்ளன.

இந்தக் கருத்திட்டத்தின் 2ஆம் கட்டத்தின் கீழ் இரத்தினபுரி, பதுளை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம் மற்றும் குருநாகல் உள்ளிட்ட 05 மருத்துவமனைகளுக்கு உயர் தொழிநுட்பத்துடன் கூடிய கைவெவைல நேர்கோட்டு ஆர்முடுக்கி இயந்திரங்களை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த இயந்திரங்களை நிறுவுவதற்கு இயலுமாகும் வகையில் மருத்துவமனையில் நிலத்தடி அரணை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# தனிநபர் தரவு பாதுகாப்பு திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றில் முன்வைப்பதற்கு அனுமதி

தனிநபர் தரவு பாதுகாப்பு திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த சட்டமூலம் தொடர்பாக சட்டமா அதிபரின் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன என அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

எனவே, தனிநபர் தரவு பாதுகாப்பு சட்ட மூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், அதன் பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் இது தொடர்பான யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருந்தது.




# சதொசவில் பல அத்தியாவசிய பொருள்களின் விலை குறைப்பு

லங்கா சதொசவில் விற்பனை செய்யப்படும் பல அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, ஒரு கிலோ கிராம் சிவப்பு சீனியின் விலை 8 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 277 ரூபா.

ஒரு கிலோ கிராம் சிவப்பு பருப்பு 4 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 279 ரூபா.

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 162 ரூபா.

ரின் மீன் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 490 ரூபா.

ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்கின் விலை 13 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 185 ரூபாவாக பதிவாகியுள்ளது.

ஒரு கிலோ கிராம் வெள்ளை கௌப்பியின் விலை 45 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 750 ரூபா.

ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 160 ரூபா.

ஒரு கிலோ கிராம் வெள்ளைப்பூண்டின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 575 ரூபாவாக பதிவாகியுள்ளது.

# மியன்மார் முகாமிலிருந்து இலங்கையர்கள் குழு மீட்பு



மியன்மாரின் – மியாவதியில் உள்ள சைபர் குற்ற முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்களில் மேலும் ஒரு குழு மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட 14 இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களைத் தாய்லாந்தில் உள்ள பாதுகாப்பான இடமொன்றுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்னதாக, பல சந்தர்ப்பங்களில் மியன்மாரில் உள்ள சைபர் குற்ற முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சந்திப்புகளில் அவருடன் பதில் பொலிஸ்மா அதிபரும், ஓரிரு மூத்த பொலிஸ் அதிகாரிகளும் உடனிருந்திருக்கிறார்கள்.

13ஆவது திருத்தத்தின் கீழ் பொலிஸ் அதிகாரம் மாகாண மட்டத்திற்கு பரவலாக்கப்பட்டுள்ளது. ஆயினும் அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அந்தப் பின்புலத்தில் மாகாண மட்டத்தில் பொலிஸாரை ஜனாதிபதி சந்திக்கும் முறை இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இது பொலிஸ் அதிகாரப் பகிர்வோடு சம்பந்தப்பட்ட விடயமோ தெரியவில்லை. போகப்போக விடயங்கள் தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

+ + +

கடந்த பொதுத் தேர்தலில் சுயேச்சையாகக் களமிறங்கிய மருத்துவர் அர்ச்சுனா தமது வைத்தியத் துறையை முன்னிலைப்படுத்திக் குறிக்கும் விதத்தில் தனது சுயேச்சைச் சின்னமாக மருந்து ஏற்றும் ஊசியை தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

இப்போது உள்ளூராட்சி சபையிலும் தனது அணிகளை அவர் சுயேச்சையாகக் களமிறக்குகிறார். ஆயினும் அவரது அணி போட்டியிடும் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் அவரது அணிக்கு மருந்து ஏற்றும் சின்னமான ஊசி கிடைக்கும் என்பது உறுதியில்லை. வேறு சுயேச்சை அணிகளும் அதனையே கோரினால் சில சமயங்களில் திருவுளச் சீட்டு போட்டு சின்னம் தீர்மானிக்க வேண்டி வரலாம். அத்தோடு ஒவ்வொரு உள்ளூராட்சி சபையில் ஒவ்வொரு சின்னத்திலும் அவரது அணி களத்தில் இறங்க வேண்டிய தேவை - கட்டாயம் - ஏற்படலாம்.

சில தரப்புகள் குறித்த சுயேச்சைச் சின்னங்களை தங்களுடைய சின்னங்களாக வெளிப்படுத்தி வந்தாலும், இந்த தேர்தலில் அவை வேறு சுயேச்சை அணிகளுக்குக் கைமாறும் நிலைமை ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

+ + +

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பொறுத்தவரை அவர்களது கூட்டில் ஒன்று கழிய, இன்னொன்று சேருகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

சங்கு கூட்டணியில் இதுவரை நீடித்த சிறிகாந்தா - சிவாஜிலிங்கம் இணையின் தமிழ்த் தேசியக் கட்சி இப்போது அதிலிருந்து நீங்கி, சைக்கிள் சின்னத்தின் பக்கம் சாய்ந்து விட்டது.

அதே சமயம் இதுவரை பெரும்பாலும் தனித்துச் செயற்பட்ட சந்திரகுமாரின் சமத்துவக் கட்சி இம்முறை சங்குக் கூட்டணிக்கு வந்துவிட்டது.

ஆக, சங்குக் கூட்டணி ஒன்றை இழந்து, இன்னொன்றைப் பெற்று இருக்கின்றது. இது வரவா, செலவா என்பதை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

## பட்டலந்த அறிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமுலாக்க நிறுவனங்களே அதனைத் தீர்மானிக்கும்."

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று அல்ஜசீரா நேர்காணலில் தெரிவித்திருந்தார். எனவே, அது செல்லுபடியாகாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனவேதான் மும்மொழிகளிலும் அந்த அறிக்கையை நாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றோம்.

பட்டலந்த வீடமைப்புத் திட்டம், சட்ட விரோதமாக தடுத்து வைத்தல் பிரதேசம் மற்றும் வதை முகாம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையிலுள்ள காரணிகள் தொடர்பில் மேலும் ஆழமாக மதிப்பாய்வு செய்து பரிந்துரைகளை வழங்குவதற்காகக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

மேலும் இந்த அறிக்கை சட்டமா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ள குழுவின் பரிந்துரைகள் மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

எனவே, பட்டலந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கையை அரசு தீர்மானிக்கப் போவதில்லை. மாறாக சட்ட அமுலாக்க நிறுவனங்களே அதனைத் தீர்மானிக்கும்." - என்றார்.

## அரச செலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவும் 2023ஆம் ஆண்டில், அரச செலவில் இலண்டன் சென்றனர் என்று வெளியாகியுள்ள செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

2023ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்று சந்தர்ப்பங்களில் இலண்டன் சென்றுள்ளார். மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் பங்குப்பற்றுவதற்காக 2023 மே மாதம் 9ஆம் திகதி இலண்டனுக்கான முதலாவது பயணத்தை அவர் மேற்கொண்டிருந்தார்.

பாரிஸ் மாநாட்டில் கலந்து கொண்டதன் பின்னர் சர்வதேச ஜனநாயக சங்கத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான அமர்வில் கலந்துகொள்வதற்காக இரண்டாவது தடவையாக அவர் இலண்டன் சென்றிருந்தார்.

அதனையடுத்து ஹவானாவில் நகரத்தில் இடம்பெற்ற ஜி 77 உச்சி மாநாட்டில் கலந்துகொண்டதன் பின்னர், நியூயோர்க்குக்கும் பின்னர் இலண்டனுக்கும் அவர் பயணித்திருந்தார்.

மைத்திரி விக்கிரமசிங்கவுக்குப் பிரித்தானியாவின் வல்வர்ஹெப்டன் பல்கலைக்கழகத்தினால் பேராசிரியர் பதவி வழங்கும் நிகழ்வு அந்தச் சந்தர்ப்பத்தில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், நியூயோர்க்குக்குச் சென்று வரும் வழியில் அந்த நிகழ்வில் அவர் பங்கேற்றிருந்தார்.

இந்தப் பயணங்களின்போது அவர் பல அரச தலைவர்களைச் சந்தித்திருந்ததுடன், பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க சர்வதேச மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள் மற்றும் மாநாடுகளிலும் பங்கேற்றிருந்தார்.

## ஈஸ்டர் தாக்குதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் அறிவிப்பை எதிர்மறையான ஒரு விடயமாக நாம் பார்க்கவில்லை. அவரால் தெரிவிக்கப்படும் விடயங்கள் நியாயமானவையாகும். எந்தவொரு பிரச்சினையின் போதும் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் மனதளவில் பாரிய துயரத்தை எதிர்கொள்ள நேரிடும்.

அந்தச் சமூகத்துடன் தொடர்புடையவர்களுக்கு அது பாரிய கவலையை அளிக்கும். அந்தவகையிலேயே கத்தோலிக்க மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் பேராயரின் அதிருப்தியும் கவலையும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகும். அரசு என்ற ரீதியில் எமக்கும் அதற்கான பொறுப்பு காணப்படுகின்றது.

எனவே, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்த விசாரணைகளின் முன்னேற்றத்தைக் கூறுவதை விட, அதன் அடிப்படையில் எடுக்கப்படவுள்ள சட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை விரைவில் அனைவராலும் அறிந்து கொள்ள முடியும்.

கொலையாளிகளே இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு சாட்சிகளை அழித்த சூழலிலேயே நாம் ஆட்சியமைத்திருக்கின்றோம்.

எனவே, மீண்டும் அவற்றை முன்னெடுப்பது இலகுவான விடயமல்ல. எவ்வாறிருப்பினும் இந்தக் கொடூர சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்." - என்றார்.

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

தடயவியல் பொலிஸாரும் தடயங்களைப் பெற்றனர்.

கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் சடலத்தைப் பார்வையிட்டுப் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

இதையடுத்துச் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இறந்தவர் யார் என நேற்று இரவு வரை அடையாளம் காணப்படவில்லை.







# ஜனாதிபதி அநுரகுமார தென் மாகாண பொலிஸ் உயரதிகாரிகளுடன் சந்திப்பு

எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் அடிபணியாமல் தமது பணியை ஆற்றுமாறு தென் மாகாண பொலிஸ் உயரதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அதற்காக அரசியல் அதிகார தரப்பு என்ற வகையில் வசதிகளை வழங்க தமது அரசாங்கம் தயாரெனவும் தெரிவித்தார்.

தென் மாகாண பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.



நாட்டின் அடிப்படைச் சட்டத்திற்கு அனைவரும் பணிய வேண்டுமெனவும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பொலிஸ் திணைக்களத்தை சார்ந்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

திட்டமிட்ட வன்முறை செயற்பாடுகள் மற்றும் போதைப் பொருள் தொடர்பிலான வன்முறைகள் தொடர்பான தரவுகள் குறித்து தென் மாகாண பொலிஸ் உயரதிகாரிகள் இதன் போது ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியதுடன், குற்றத் தடுப்புக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதன்போது பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அழுத்தங்களின்றி பிரஜைகளின் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்கும் செயற்பாடுகளை பலப்படுத்துமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதன்போது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்த சந்திப்பில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல, பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் தென் மாகாண பொலிஸ் பிரதானிகள் கலந்து கொண்டனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொலிஸ் தலைவரைத் தேடும் பொலிஸ்

இலங்கை நாட்டின் பொலிஸ்மா அதிபரை பொலிஸ் துறையினரே கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக சல்லடை போட்டுத் தேடி அலையும் அவல நிலைமையில் இலங்கையின் பாதுகாப்பு துறை உள்ளது.

உயிரிழப்பை ஏற்படுத்திய ஒரு துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு வெலிகம நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

தேசபந்து தென்னக்கோன் பதில் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய போது - 2023 இறுதியில் - அவரின் கீழ் தனிப்பட்ட ரீதியில் விசேட தாக்குதல் அணியாக ஒரு பொலிஸ் குழு செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது. அந்த விவகாரத்தை ஒட்டியே இந்தக் கைது உத்தரவு வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து பொலிஸ்மா அதிபர் தலைமறைவாகியுள்ளார்.

ஏற்கனவே உயர் நீதிமன்றத்தின் உத்தரவு காரணமாக பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இப்போது நாட்டில் தேடப்படும் நபர் ஆவார்.

தம்மைக் கைது செய்ய விடுக்கப்பட்ட உத்தரவை ஆட்சேபித்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட முறையீடு அந்த நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டு விட்டது.

அதனை அடுத்து அவரை கைது செய்வதற்கான தேடுதல் நடவடிக்கையை பொலிஸ் திணைக்களம் மேலும் முடுக்கி விட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. ஏற்கனவே அவரைக் கைது செய்வதற்காக ஆறு பொலிஸ் குழுக்கள் களத்தில் இறக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு மேலதிகமாக நான்கு குழுக்களை அவரது மேன்முறையீட்டு நீதிமன்ற விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமையை அடுத்து களத்தில் பொலிஸ் பிரிவு இறக்கி உள்ளது என செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

கடந்த நாலாம் திகதி முதல் பொலிஸ்மா அதிபரை அவரது பொலிஸ் துறை தேடி வருகின்றது. ஆயினும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவரைத் தேடி அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அவரது மனைவியிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்திருக்கின்றனர். அது மாத்திரமில்லாமல், அவரது இல்லத்தில் இருந்து 120 போத்தல் வெளிநாட்டு விஸ்கி குடி வகையை அவர்கள் கண்டுபிடித்து பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

தம்மைக் கைது செய்ய விடுக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராகத் தான் செய்த மேன்முறையீட்டை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ள நிலையில், நீதிமன்றத்தின் முன்னால் முன்னிலையாவதைத் தவிர தேசபந்து தென்னக்கோனுக்கு வேறு மாற்று வழி இல்லை என்றும் கூறப்படுகின்றது.

எனினும், தனது பொலிஸ் துறையினால் தானே வழியில் எங்கேயும் கைது செய்யப்பட்டு, கைவிலங்கு இடப்பட்டு அழைத்துச் செல்லப்படும் அவல நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதற்காக, அவர் எங்கேயும் மருத்துவமனையில் சுகவீனமான நிலையில் சேர்க்கப்பட்ட கட்டத்தில், அது பற்றி பொலிஸாருக்குத் தகவல் வழங்கி, வைத்தியசாலைக் கட்டிலில் இருந்தபடியே கைதாகும் சூழ்நிலையை அவர் ஏற்படுத்தக் கூடும் என்று ஒரு பேச்சு கொழும்பு வட்டாரங்களில் அடிபடுகின்றது.

அடுத்து வரும் நாள்களில் தேசபந்து தென்னக்கோனின் நிலைமை தொடர்பாக சில விடயங்கள் தெளிவாகும் என்று பல தரப்பிலும் நம்பப்படுகின்றது.

பொறுத்திருந்து பார்ப்போம்.





# வடக்கு மாகாண பெண்களை அரசியலுக்கு தயார்ப்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறை

(த.சுபேசன்)

கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிரிஜ் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண பெண்களை அரசியலுக்கு தயார்ப்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறை கடந்த 13ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை இரு பிரிவுகளாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் இம்முறை உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கு முகம் கொடுக்கவுள்ள பெண்கள், எதிர்காலத்தில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ள பெண்கள், பெண்கள் அரசியலில் ஈடுபடுவதனை ஊக்குவிக்கும் ஆண்கள் என 70க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



பயிற்சிப் பட்டறையில் திருமதி கோசலை மதன், செந்தூர்ராஜா, கஜவேந்தன் உள்ளிட்ட வளவாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கியிருந்தனர்.



# இறக்குமதி செய்யப்படும் பால் மா விலை அதிகரிப்பு



இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா விலையை 50 ரூபாவினால் அதிகரிப்பதற்கு பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த ஒருவருட காலப்பகுதியில் சர்வதேச சந்தையில் பால் மாவின் விலை 20 வீதமாக அதிகரிப்பட்டமையை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு இணையாக இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா விலையை 4.7 வீதத்தினால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வவுணதீவில் விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கண்டியனாறு, அடைச் சகல் ஆகிய குளங்களை புனரமைக்கு மாறும் வருடாவருடம் ஒதுக்கப்படும் 3 ஆயிரம் கோடி ரூபாவிற்கு நிரந்தரமாக விவசாய வாய்க்கல்களை புனரமைக்கு மாறும் அரசாங்கம் மற்றும் விவசாய திணைக்களத்தைக் கோரி விவசாயிகள் நேற்று செவ்வாய்க்கிழமை வவுணதீவு பிரதேச செயலகத்தின் முன்னாள் கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச விவசாயிகள் அமைப்புக் கள்ஆர்பாட்டத்திற்குஅழைப்புவிடுத்ததை யடுத்து நேற்றுக் காலை 9 மணிக்கு வவுணதீவு பிரதேச செயலகத்தின் முன் னாள் விவசாயிகள் ஒன்று திரண்டனர்.

இதனையடுத்து "மாகாண நீர்ப்பாசன திணைக்களமே! வெளிப்படையாக வேலைகளை செய்", "கண்டியநாறு திட் டம் கைவிடப்பட்டதா?", "அரசாங்கத்தின் நிதியை பசளை மானியம், நஷ்டஈடு என விரயம் செய்யவா அரச அதிகாரிகள்?", "ஏன் எமது இளைஞர், யுவதிகள் வெளிநாடு செல்லவேண்டும்", "மாகாண நீர்ப்பாசனத் திணைக்களமே! ஊப்பாற றில் வீணாக செல்லும் நீரை விவசாயத் திற்கு பயன்படுத்தத் திட்டங்களை தீட்டு!", 1,600 ஏக்கர் விவசாய காணி, 4,000 ஏக்கர் மேட்டுக்காணிகளுக்கு நீர் வழங்குவதற்கு ஏன் தயக்கம்?", "விவசாயிகளை பிரித்தாளிம் தந்திரம் வேண்டாம்!", "அரசாங்க அதிபரின் அராஜகம் ஒழிக!", "பிரதேச அபிவிருத்தி யின் நிலை என்ன பிரதேச செயலா ளரே?", "மாவட்டத்தில் வெள்ள நிவார ணம் வழங்குவதே அதிகாரிகளின் கடமையா?", "விவசாயிகளே விழித் தொழுங்கள்!" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு சுமார் ஒருமணித்தியாலம் கவனவீரப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர. அவர் கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# தவறுதலாக கைத்துப்பாக்கி வெடித்ததில் பொலிஸ் உத்தியோகத்தருக்குக் காயம்!

## காரைதீவுப் பகுதியில் திங்கட்கிழமை இரவு சம்பவம்





(பாறுக் ஷிஹான்)

கைத்துப்பாக்கி திடிரென வெடித்த தில் காயமடைந்த பொலிஸ் உத்தி யோகத்தர் கல்முனை அஷ்ரப் ஞாப கார்த்த வைத்தியசாலையில் சிகிச் சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது.

வழமைபோன்று கடமை நிமிர்த்தம் துப்பாக்கியை பெற்றுக்கொள்வதற்கு ஆயுத களஞ்சியத்திற்கு பொறுப்பான நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோ கத்தரிடம் மற்றுமொரு பொலிஸ் உத்தி யோகத்தர் பிஸ்டல் ரக துப்பாக்கி ஒன் றினை பெற சென்றவேளை இச்சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது ஆயுத களஞ்சியத்திற்கு பொறுப்பக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கைத்துப்பாக்கியை பரிசீலனை செய்வதற்காக மேசை யில் வைத்த வேளை திடிரென கைத் துப்பாக்கி தவறி வெடித்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் ஆலோச னையில் காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். எஸ். ஜெகத் வழி காட்டுதலில் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் 39 வயதுடைய நல்லதம்பி நித்தியா னந்தன் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஆவார். வலது காலில் துப்பாக்கி ரவை துளைத்துச் சென்ற நிலையில் அவர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# திருகோணமலை நகரசபை ஊழியர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்



(முஹம்மட் நிஸ்னாத்)

திருகோணமலை நகரசபை ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை அடையாள பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டார்கள்.

பொலிஸாரின் கைது நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், வேலை நேரத்தில் தமக்கான பாதுகாப்பை வலியுறுத்தியும் நகர சபையின் முன்பாக ஒன்று கூடி சில மணி நேரம் வேலை நிறுத்தத்தில் அவர்கள் ஈடுபட்டார்கள்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி மழை வெள்ளம் காரணமாக திருமலை - விகாரை வீதியின் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் உள்ள வடிகானை துப்பரவு செய்யும் நடவடிக்கையில் நகரசபை ஊழியர்கள் ஈடுபட்டபோது எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் எதிர்ப்பு தெரிவித்து நகரசபை ஊழியர் ஒருவரை தாக்கியிருந்தனர் எனவும், பின்னர் அவ்விடத்திற்கு வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன, நகரசபை செயலாளர் மற்றும் பொலிஸார் சமரசம் செய்து சர்ச்சையை முடித்து வைத்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை நகரசபை ஊழியர்கள் 5 பேர் திருகோணமலை தலைமைப் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக வரழைக்கப்பட்டு, கைது செய்யப்பட்டனர். திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில் 5 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

இப்படிக் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், பொலிஸாரின் பக்கச்சார்பான நடவடிக்கைக்கு நீதி கோரியும் அடையாள பணிப்பகிஷ்கரிப்பு ஆர்ப்பாட்டத்தில் நேற்று ஊழையர்கள் ஈடுபட்டனர்.

அத்துடன் தாம் தமக்கு ஒதுக்கப்பட்ட கடமையை செய்கின்ற வேளைகளில் தொடர்ந்தும் தாக்கப்படுகின்றனர் எனவும், இதனால் தங்கள் கடமையை செய்வதற்கு அச்சமாக இருப்பதாகவும், கடமையை செய்கின்ற நேரத்தில் தமக்கான பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கும் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் நகர சபை செயலாளரிடம் இதன்போதுவர்கள் கையளித்தனர்.

மகஜரை பெற்றுக் கொண்ட செயலாளர் ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவார் எனவும், சிலரை ஆளுநரின் செயலாளருடன் சந்தித்து கலந்துரையாட சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பார் எனவும் தெரிவித்தார்.

இந்த விடயம் நீதிமன்றில் இடம் பெற்று வருவதன் காரணமாக, அது நீதிமன்ற நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடும் என்பதாலும், சேவையை நாடி வருகின்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்ததாத வகையில் சேவையில் ஈடுபடுமாறு கோரியமைக்கி இணங்கவும் ஊழியர்கள் கலைந்து சென்றனர்.



# 29 வீத மாணவர்கள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்; புதிய ஆய்வில் தகவல்

இலங்கையிலுள்ள 3.5 மில்லியன் இளம் தலைமுறையினரில் 29 வீத பாடசாலை மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளனர் என கண்டறியப்பட்டுள்ளது.

2024 உலகளாவிய பாடசாலைகளை அடிப்படையாக கொண்ட மாணவர் சுகாதார ஆய்வறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

71 வீதமானோர் பாடசாலைக்கு செல்கின்றனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 40 அரச பாடசாலைகளில் தரம் 08 முதல் 12 வரையிலான 3,843 மாணவர்களை இணைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் 17.7 வீதமானோர் ஆரோக்கியமற்ற பானங்களை அருந்துவதுடன் இவர்களில் பெரும்பாலானோர் ஆண் மாணவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், 28 வீத மாணவர்கள் நாளாந்தம் சீனி கலந்த பானங்களை அருந்துவதுடன், 28.5 வீத மாணவர்கள் உப்பு கலந்த சிற்றுண்டிகளை பெற்றுக் கொள்கின்றனர் என கண்டறியப்பட்டுள்ளதாக ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைத் தவிர 29.3 வீதமானோர் அதிக எண்ணெய் கலந்த உணவை பெற்றுக் கொள்வதுடன் 40.9 வீத மாணவர்கள் நாளாந்தம் அதிக சீனி கலந்த உணவுகளை உட்கொள்கின்றனர் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

ஆண், பெண் மற்றும் வயதுக்கமைய ஒரு சிகரெட் அல்லது இரண்டு சிகரெட்டுக்களை பயன்படுத்திய அல்லது பயன்படுத்த முயற்சித்த மாணவர்களின் எண்ணிக்கை 12.8 வீதமாக பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த சுகாதார ஆய்வறிக்கையானது சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக பிரதியமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி தலைமையில் சர்வதேச பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் வெளியிடப்பட்டுள்ளது.

# 12 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்கள் கைப்பற்றல்




சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்கள் சுங்கத் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக வளாகத்தில் உள்ள களஞ்சியசாலையொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சிவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து பாதுக்க பகுதியில் உள்ள நிறுவனமொன்றுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி சிகரெட் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட 713,000 வெளிநாட்டு சிகரெட்களின் பெறுமதி 12 கோடி ரூபாவிற்கும் அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி சிகரெட் தொகை இறக்குமதி செய்யப்பட்டமை ஊடாக அரசாங்கத்திற்கு 10 கோடி ரூபாவிற்கும் அதிக தொகை நட்டம் ஏற்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பௌத்த – சிங்களவருக்கு இங்குள்ள உரிமை, மரியாதையை தமிழ் – இந்துக்களுக்கும் இலங்கை அரசு வழங்க வேண்டும்!

## கனடா சைவ சனாதன சேவை மையத்தின் சுவாமி சங்கரானந்தா வேண்டுகோள்



பௌத்த – சிங்களவருக்கு இங்குள்ள உரிமை, மரியாதையை தமிழ் – இந்துக்களுக்கும் இலங்கை அரசு வழங்க முன்வர வேண்டும் என்று கனடா, ஒன்றாரியோ பிரம்ப்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் சைவ சனாதன சேவை மையத்தின் சுவாமி சங்கரானந்தா கோரியிருக்கின்றார்.

இது தொடர்பாக இலங்கை ஜனாதிபதி, பிரதமர், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு அவர் மும்மொழியிலும் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:–

இலங்கை, என்ற வரலாற்றுச் செழுமையும் பன்முகத்தன்மையும் கொண்ட தீவில், பொது சகாப்தத்திற்கு (கி.மு.) முன்பே, சிங்கள மற்றும் தமிழ் ஆட்சியாளர்களுக்கு இடையே ஏராளமான போர்கள் நடைபெற்று உள்ளன்ழ் என்பதை,இலங்கை என்ற நாட்டின் வரலாற்று தகவல்களை உள்ளடக்கி, பௌத்த மதத்தை முதன்மைப் படுத்தி, பௌத்த பிக்குகளினால் எழுதப்பட்ட மகாவம்ச குறிப்பிடுகின்றது.

இந்த மோதல்கள், இலங்கையில் வாழ்ந்த சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான இனவாத மோதல்கள் அல்லாமல் ஆளும் அரசர்களுக்கிடையேயான அதிகாரத்திற்கான போர்களாகவே இருந்தன என்பதோடு, பௌத்த மத நூலான மகாவம்சவின் அடிப்படையில், இலங்கையில் சிங்கள மற்றும் தமிழ் இனங்களின் இருப்பு என்பது 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கிறது.

இந்த இரு சமூகங்களும் முறையே பௌத்தம் மற்றும் இந்து மதத்தில் ஆழமாக வேரூன்றி இருந்த வேளையில், கிறிஸ்துவுக்கு பின் 15 ஆம் நூற்றாண்டில், ஐரோப்பிய காலனித்துவ சக்திகளின் வருகையினால், கிறிஸ்தவ மிஷனரிகளின் நெறிப்படுத்தலில்,இலங்கைத் தீவு கட்டாய மத மாற்றங்களையும் கலாசார பாரம்பரியத்தின் அழிவையும் எதிர்கொண்டது என்பதோடு, ஐரோப்பிய கிறிஸ்தவ காலனித்துவ ஆட்சியின் போது, ஐந்து குறிப்பிடத்தக்க சிவன் கோவில்கள் உட்பட பல இந்து கோவில்கள் இடித்து அழிக்கப்பட்டு, உலக வரலாற்றில் தமிழர்களின் கடைசி ராச்சியமான யாழ்ப்பாண ராச்சியம் தகர்க்கப்பட்டு, அந்த யாழ்ப்பாண ராச்சியத்தின் அதிகாரத்துக்குரிய மன்னனான சங்கிலியனும், ஐரோப்பிய கிறிஸ்தவ காலனித்துவ ஆட்சியாளர்களினால் கொல்லப்பட்டார்.

இந்த வரலாற்றுக் கொடுமை ஐரோப்பிய காலனித்துவ கிறிஸ்தவ மிஷனரிகளினால் நடந்தேறி அவர்கள் பல நூற்றாண்டுக்கள் இலங்கையை ஆண்டு வெளியேற, அவர்களிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்து பின்னரும் கூட, தொடர்ந்து மக்களாட்சியில் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களும் நாட்டின் அதிபர்களும், பௌத்த மதத்தையும் சிங்கள பெரும்பான்மையினரையும் முன்னுரிமைப்படுத்தியே ஆட்சி நடத்தினார்கள்.

இதற்கு பெரும்பாலும் அரசியல் நோக்கங்கள் காரணமாக இருந்தன என்றாலும், இதுவே துரதிர்ஷ்டவசமாக, தமிழ் சமூகத்திற்கு எதிரான இனப் பாகுபாட்டிற்கு வழிவகுத்தது.

இதன் காரணமாக பதற்றங்கள் அதிகரித்து, பல தசாப்தங்களாக, இந்த அரசியல் மற்றும் இனப் பிளவுகள் நீடித்து, இன மோதல் உச்சக்கட்டத்தை அடைந்து, மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக பெரும் போரும் வெடித்தது.

இந்தப் போரின் விளைவாக 200,000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டு 800,000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உலகம் எல்லாம் புலம்பெயர்ந்தார்கள். இந்த வரலாற்று நிகழ்வுகளை நான் இங்கே தற்போது குறிப்பிடுவதன் காரணம் என்னவென்றால், இலங்கையில் வாழ்ந்து வரும் சிங்கள மற்றும் தமிழ் இனங்களிக்கு இடையே பிளவுகளை உருவாக்குவதற்காக அல்ல, மாறாக மகாவம்சவின் படி இலங்கை என்ற நாட்டில் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களின் நீண்டகால இருப்பை உறுதிப்படுத்தி, வரலாற்றை அங்கீகரித்து, கடந்த காலத்தைப் புரிந்து கொண்டு, எதிர்காலம் குறித்து சிந்தித்து, அனைத்து சமூகங்களுக்கும் சமமான அங்கீகாரத்தையும் மரியாதையையும் உறுதி செய்ய வேண்டும் என்பதற்காகவே ஆகும்.

ஆனால் தற்போதும் இலங்கையில் நடப்பது என்னவென்றால் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இலங்கை தொல்பொருள் துறை தனது செயல்பாடுகளால் நிலங்களை ஆக்கிரமிக்கின்றது.

புத்த சாசனம், மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சகம் சில புத்த பிக்குகளின் ஆதரவுடன், புத்த விஹாரைகளை கட்டுவதற்காக தமிழர்களின் நிலங்களை அபகரிக்கின்றது.

இதனால் இந்தப் பகுதிகளின் மக்கள் தொகை மற்றும் கலாச்சார நிலப் பரப்பில் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்தோடு இலங்கையின் மத மற்றும்தொல்பொருள்கொள்கைகள்குறித்த எனது கவலைகள், முக்கியமாக வரலாற்று, கலாச்சார மற்றும் அரசியல் கேள்விகளை எழுப்புகின்றன.

அதாவது –

2000 ஆயிரம் ஆண்டுகளாக இலங்கையில் இந்து மதத்திற்கும் பௌத்தத்திற்கும் இடையிலான உறவு ஆழமாகப் பின்னிப் பிணைந்திருந்தும், இலங்கையின் பௌத்த வரலாறு மற்றும் கலாசார அம்சங்கங்கள் போலவே இலங்கையில் இந்து வரலாறு மற்றும் கலாச்சார அம்சங்கங்கள் நிறைந்திருந்தும், புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சகம், தனியாக அமைச்சு இருக்கின்றது.

அது இந்து மதம் உட்பட பல மதங்களை மேற்பார்வையிடுகிறது என்றாலும், இந்து விவகாரங்களுக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட்ட தனி அமைச்சகம் எதுவும் இல்லை என்பதை, தமிழ் சமூகமும் இந்து அமைப்புகளும் சுட்டிக் காட்டி,நாட்டில்இந்துபாரம்பரியத்தைசிறப்பாக பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும்

தொடர்ச்சி▼

# பௌத்த – சிங்களவருக்கு இங்குள்ள உரிமை, மரியாதையை தமிழ் – இந்துக்களுக்கும் இலங்கை அரசு வழங்க வேண்டும்!

**தொடர்ச்சி▲**

பாதுகாப்பதற்கும் தனி அமைச்சகம் தேவை என்பதை வலியுறுத்தி வருகின்றன.

அவர்களது கவலைகள் நியாயமானது என்பதற்கு ஏதுவாக தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழும் மற்றும் இந்து பாரம்பரியம் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் இருக்கும் வரலாற்று தளங்களுக்கான அணுகுமுறையில் இலங்கை தொல்பொருள் திணைக்களம் பௌத்த சார்பு நிலைப்பாட்டை எடுத்து வருகின்றது.

அதாவது அந்த தொல்பொருள் திணைக்களத்தின் தொல்பொருள் கொள்கைகள் சிங்கள பௌத்தத்தை ஆதரிக்கும் அதே நேரத்தில், இந்து வரலாற்று தளங்களை புறக்கணித்து நிராகரிக்கின்றன என்பதோடு, இந்து கோவில்களுக்கு தொல்பொருள் திணைக்களத்தால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு தொல்பொருள் பாதுகாப்பின் கீழ் கோவில்கள் கையகப்படுத்தப்படுகின்றன.

வரலாற்று ரீதியாக, பௌத்தம் வருவதற்கு முன்பு, இலங்கையில் தென்னிந்தியாவைப் போலவே இந்து மரபுகளைப் பேணியே மக்கள் வாழ்ந்து வந்தனர்.

பௌத்த நூலான மகாவம்சம், மன்னர் தேவநம்பிய திஸ்ஸ இந்து தாக்கங்களிலிருந்து பௌத்த நம்பிக்கை முறைக்கு மாறியதை ஒப்புக் கொள்கிறது.

இதன் காராணமாக பௌத்தம் ஆதிக்கம் செலுத்தும் மதமாக மாறிய போதிலும், இந்து மதம் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது, குறிப்பாக இது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில், தமிழ் இந்துக்கள் தங்கள் நம்பிக்கையைத் தொடர்ந்து பின்பற்றி வந்தனர் என்றபோதும், பல தமிழ் இந்துக்கள் இலங்கையில் இந்து மத வரலாற்று கலாச்சார பங்களிப்புகள் தேசியக் கொள்கைகளில் குறைவாகவே பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதாக உணர்கிறார்கள்.

இந்துக் கோயில்கள் இடிபட்டதும், பொதுவாக இந்து மத நிகழ்வுகளுக்கு அரசின் ஆதரவு இல்லாததும், அத்தோடு வரையறுக்கப்பட்ட சமூகப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்த தொல்லியல் துறையில் தமிழகளுக்கான ஒரு பிரிவும், பௌத்தத்திற்கு புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சகம், தனியாக இருப்பதைப் போன்று இந்து மத கலாச்சார விவகாரங்களை கையாள அமைச்சகம் இல்லாமல் இருப்பதும் தமிழ் மக்களுக்கு சிங்கள அரசின் மீது சந்தேகமும் கவலைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

ஒரு பன்முகத்தன்மை கொண்ட ஆன்மீகவாதியாக நான் எழுதிய இந்தக் கருத்தின் நோக்கமானது, இலங்கை என்ற நாடு அதன் பன்முகத்தன்மை கொண்ட பௌத்த மற்றும் இந்து மத கலாச்சார வரலாற்றை அங்கீகரித்து மதிக்க வேண்டும் என்ற விருப்பத்தை எடுத்துக்காட்டுகிறது.

உண்மையிலேயே ஒன்றுபட்ட இலங்கையில் அரச அதிகாரிகள் அனைத்து மத மரபுகளுக்கும் சமமான அங்கீகாரத்தையும் பாதுகாப்பையும் வழங்க வேண்டும் என்ற வகையில், இலங்கையில் பாரம்பரியம் மிக்க இந்து மதமும், பாரம்பரியம் மிக்க பௌத்த மதத்தைப் போலவே, மரியாதையையும் பாதுகாப்பையும் பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்பதை, இந்தக் கட்டுரையின் மூலம், எனது கருத்தாக மட்டுமல்லாது, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் பூர்வீகத் தமிழர்களின் கருத்தாகவும் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில், ஒரு இந்து மத ஆன்மீகவாதி என்ற முறையில், இந்த செய்தியை கௌரவ ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்களுக்கும்

மற்றும், கௌரவ பிரதமர் ஹரிணி அமரசூரிய அவர்களுக்கும், அத்தோடு சங்கைக்குரிய மகாநாயக்க தேரர்களுக்குத் தெரியப்படுத்தி, ஐக்கிய இலங்கையின் எதிர்காலத்தைக் கருத்தில் கொள்ள என் இந்த கருத்தை உள்வாங்கி, பௌத்த சிங்கள மக்களுக்கு இருக்கும் உரிமையையையும் மரியாதையையும், மகாவம்சவின் படி பௌத்த மதம் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே இருந்த தமிழ் இந்துக்களுக்கும் வழங்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். – என்று உள்ளது.

# வவுனியா வடக்கில் அதிகம் இளைஞர்களுடன் களமிறங்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## தமிழ் தேசியம் சார்ந்து ஆட்சி அமைக்கும் என அமைப்பாளர் தவபாலன் நம்பிக்கை

(கி.வசந்தன்)



14 இளைஞர்களுடன் களமிறங்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னனி வவுனியா வடக்கில் தமிழ் தேசியம் சார்ந்து தூய அரசியலுடன் ஆட்சி அமைக்கும் என கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ். தவபாலன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் வேட்பு மனுவை நேற்றுத் தாக்கல் செய்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வவுனியா மாவட்டத்தின் மாநகர சபை உட்பட 4 சபைகளில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகிறது.

வவுனியா வடக்கு உள்ளூராட்சி சபைக்கான வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளோம். நான்கு சபைகளிலும் கடுமையான நெருக்கடிக்கு இடையே இந்தத் தேர்தலை எதிர் கொண்டாலும், நிச்சயமாக தமிழ் தேசிய பரப்பில் உரிமைக்காக நேர்மையாக அரசியல் செய்கின்ற ஒரு தரப்பு என்ற அடிப்படையில் கணிசமான வெற்றிகளைப் பெறுவோம்.

வவுனியா வடக்கைப் பொறுத்தவரை நிலப்பரப்பு திட்டமிட்ட ரீதியில் கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றது. இம்முறை சிறந்த வேட்பாளர்களை – அதிலும் இளைஞர்களை அதிமாக உள்வாங்கி – நிறுத்தியுள்ளோம். 14 இளைஞர்களை களமிறக்கியுள்ளோம். அவர்களுடன் கடந்த முறை உள்ளூராட்சி மன்றத்தில் இருந்தவர்கள், அனுபவம் வாய்ந்தவர்கள், உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்கக் கூடியவர்களைக் களம் இறக்கியுள்ளோம்.

வவுனியா வடக்கைப் பொறுத்தவரை மத வழிபாடு தடுக்கப்படல், நில ஆக்கிரமிப்பு இடம்பெறும் பகுதியாக இருக்கிறது. தூய்மையாக அரசியல் பேசும் ஒரு தரப்பு என்ற அடைப்படையில் இம்முறை நாம் ஆட்சி அமைப்போம்.

தூய்மையான, நேர்மையான தமிழ்த் தேசியம் நிறைந்த பிரதேச சபை ஒன்று உருவாக வேண்டும் என்ற அவா உள்ளது. அதனை மக்கள் நிறைவேற்றுவார்கள். அதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களால் ஆற்றக் கூடிய பணிகளை தமிழ் தேசிய நோக்கோடு செயற்படுத்துவோம். – எனத் தெரிவித்தார்.



# நாக்பூரில் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு அமுல்

இந்தியாவின் நாக்பூரின் சில பகுதிகளில், 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முகலாய ஆட்சியாளரின் கல்லறையை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையால் தூண்டப்பட்ட மோதல்களின் காரணமாகக் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


மத்திய இந்தியாவில் கடந்த திங்களன்று இடம்பெற்ற வன்முறைகள் காரணமாகப் பல வாகனங்கள் சேதமடைந்ததுடன், பலர் காயமடைந்தனர்.

இந்நிலையில் நாக்பூரின் மேற்கு மாநிலமான மகாராஷ்டிராவின் முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ், சட்டம் ஒழுங்கை பராமரிக்க அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

எனினும் அங்கு வன்முறைகள் மோசமடைந்ததையடுத்து நாக்பூரின் சில பகுதிகளில், காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.







# சீமான் மீதான வழக்குகளை ஒன்றாக சேர்த்து விசாரிக்க உத்தரவிட உயர் நீதிமன்றம் மறுப்பு

பெரியாரை இழிவுபடுத்தி பேசியதாக சீமானுக்கு எதிராக பதியப்பட்டுள்ள 50 இற்கும் மேற்பட்ட வழக்குகளை ஒன்றாக சேர்த்து விசாரிக்க உத்தரவிட முடியாது என உயர் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

பெரியாரை அவதூறாக பேசினார் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளரான சீமான் மீது தமிழகம் முழுவதும் பல்வேறு பொலிஸ் நிலையங்களில் 50 இற்கும் மேற்பட்ட வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இந்த வழக்குகளின் விசாரணைக்கு நேரில் ஆஜராகக் கூறி தினமும் ஒரு பொலிஸ் நிலையத்தில் இருந்து சீமானுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வருகின்றன. இந்நிலையில், பெரியார் தொடர்பான பேச்சுக்காக தனக்கு எதிராக பதியப்பட்டுள்ள 50 இற்கும் மேற்பட்ட வழக்குகளை ஒன்றாக சேர்த்து ஒரே வழக்காக விசாரிக்க டி.ஜி.பிக்கு உத்தரவிடக் கோரி சீமான் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, சீமான் தரப்பில் வழக்கறிஞர் எஸ்.சங்கர் ஆஜராகி,



“பெரியார் குறித்து சீமான் வடலூரில் தான் பேசினார். ஆனால் அந்த பேச்சுக்காக தமிழகம் முழுவதும் பல்வேறு காவல் நிலையங்களில் அவர் மீது பொலிஸார் 50 இற்கும் மேற்பட்ட வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர். பெரியாரை இழிவுபடுத்தி சீமான் ஒருபோதும் பேசவில்லை. பெரியார் பொதுக் கூட்டங்களில் பேசியது, நாளிதழ்களில் எழுதிய கட்டுரை ஆகியவற்றின் அடிப்படையில்தான் சீமான் பேசினார். எனவே இந்த வழக்குகளை எல்லாம் ஒன்றாக சேர்த்து ஒரே வழக்காக விசாரிக்க டி.ஜி.பிக்கு உத்தரவிட வேண்டும்,” என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, “எந்தெந்த பொலிஸ் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன? அந்த வழக்குகளின் புகார்தாரர்கள் யார்? வழக்கு எண்களின் விவரங்கள் என்ன? உள்ளிட்டவை இல்லாமல் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த மனுவை திரும்பப் பெற்று முழு விவரங்களுடன் மீண்டும் மனுவை தாக்கல் செய்யுங்கள்” என அறிவுறுத்தினார்.

அதற்குசீமான்தரப்பில்,“ஒன்லைனில் வழக்கு விவரங்களைப் பார்த்து விடக்கூடாது என்பதற்காக அந்த விவரங்களை பொலிஸார் மறைத்துள்ளனர். எனவே 50 இற்கும் மேற்பட்ட வழக்குகளின் விவரங்களை சேகரித்து தாக்கல் செய்யும் வகையில் விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளிவைக்க வேண்டும்,” என்றார்.

ஆனால் அதையேற்க மறுத்த நீதிபதி, “இந்த மனுவில் எந்தெந்த பொலிஸ் நிலையங்களில் சீமானுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குற்ற எண்கள் குறித்து எந்த விவரமும் இல்லை. சம்பந்தப்பட்ட புகார்தாரர்கள் மற்றும் பொலிஸ் ஆய்வாளர்களைக்கூட எதிர்மனுதாரர்களாக சேர்க்கவில்லை. இந்த சூழலில் 50 இற்கும் மேற்பட்ட வழக்குகளை ஒன்றாக சேர்த்து ஒரே வழக்காக விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்ற மனுதாரர் தரப்பு கோரிக்கையை ஏற்க இயலாது,” என மறுப்பு தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# இசை மேதை இளையராஜாவை சந்தித்ததில் மகிழ்ச்சி; பிரதமர் மோடி

இளையராஜா எல்லா வகையிலும் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார் என பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரபல இசையமைப்பாளர் இளையராஜா டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று சந்தித்துப் பேசினார். அப்போது, சமீபத்தில் லண்டனில் ராயல் பில்ஹார்மோனிக் இசைக்குழுவுடன் நிகழ்த்தப்பட்ட மேற்கத்திய பாரம்பரிய சிம்பொனியான வேலியன்ட் தொடர்பாக இருவரும் கலந்துரையாடினர். இளையராஜாவின் இந்த முயற்சிக்கு பாராட்டு தெரிவித்த பிரதமர் மோடி, அவரை இசை மேதை என்றும், ஒரு முன்னோடி என்றும் பாராட்டினார்.

இளையராஜா உடனான தனது சந்திப்பு குறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

““நமது இசை மற்றும் கலாச்சாரத்தில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய இசை மேதையும், மாநிலங்களவை உறுப்பினருமான இளையராஜாவைச் சந்தித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் எல்லா வகையிலும் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார்.



சில நாள்களுக்கு முன்பு லண்டனில் தமது முதலாவது மேற்கத்திய கிளாசிக்கல் சிம்பொனியான வேலியன்ட்டை அளித்ததன் மூலம் மீண்டும் வரலாறு படைத்தார்.

இந்த நிகழ்ச்சியுடன் உலகப் புகழ்பெற்ற ராயல் பில்ஹார்மோனிக் இசைக்குழு இருந்தது. இந்த முக்கியமான சாதனை அவரது இணையற்ற இசைப் பயணத்தில் மற்றொரு அத்தியாயத்தைக் குறிக்கிறது. இது உலக அளவிலான சிறப்பைத் தொடர்ந்து அளிக்கிறது” என நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமருடனான தனது சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள இளையராஜா,

“பிரதமர் நரேந்திர மோடியுடனான ஒரு மறக்கமுடியாத சந்திப்பு இது. எனது சிம்பொனி ”வேலியண்ட்” உட்பட பல விஷயங்களைப் பற்றி நாங்கள் பேசினோம். அவரது பாராட்டுக்கும், ஆதரவுக்கும் பணிகிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

# காசாவில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் பலியானோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு







காசா மற்றும் லெபனானில் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள போதிலும், இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்தநிலையில் இஸ்ரேலியப் படைகள் நேற்று நடத்திய தாக்குதல்களில் கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 400ஐ கடந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதல்களில் 660 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என பாலஸ்தீன தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல்களில் காசாவின் துணை உள்துறை அமைச்சர் மஹ்மூத் அபு-வஃபாவும் கொல்லப்பட்டுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனவரி 19 ஆம் திகதி போர் நிறுத்தம் தொடங்கியதிலிருந்து காசா பகுதியில் நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் இதுவாகும்.

காசா மீதான இஸ்ரேலின் 'கொடிய' வான்வழித் தாக்குதல்களுக்கு அமெரிக்காவின் வரம்பற்ற அரசியல் மற்றும் இராணுவ ஆதரவே காரணம் என்று ஹமாஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இந்தத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 413 பேர் கொல்லப்பட்டனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவதை ஹமாஸ் வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறது என்றும், இந்த விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் பிற மத்தியஸ்தர்களின் ஆலோசனைகளை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது என்றும் குற்றம் சாட்டிய இஸ்ரேல், போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் விதமாக காசா மீது கடுமையான வான்வழித் தாக்குதலைத் தொடங்கியது.

"ஆக்கிரமிப்பாளருக்கு (இஸ்ரேல்) வரம்பற்ற அரசியல் மற்றும் இராணுவ ஆதரவை அமெரிக்கா அளித்துளளது. இதன் காரணமாகவே, காசாவில் பெண்கள் மற்றும் குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தப் படுகொலைகளுக்கு அமெரிக்காவே முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும்" என்று ஹமாஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதேவேளையில், போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து, அதை துல்லியமாக செயல்படுத்தியதாகவும் ஹமாஸ் கூறியுள்ளது.

இது தொடர்பாக ஹமாஸ் அதிகாரி ஒருவர் கூறும்போது, "ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து, அதை துல்லியமாக செயல்படுத்தியது. ஆனால், இஸ்ரேல் போரை தொடங்கிய தன் மூலம் அதன் வாக்குறுதியை மீறியுள்ளது. நிலைமையை மதிப்பிடுவதற்கும், ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் மத்தியஸ்தர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஹமாஸ் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்துள்ளது." என்றார்.

காசா மீதான இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்களை எகிப்து கண்டித்துள்ளது. கட்டார் மற்றும் அமெரிக்காவுடன் இணைந்து காசா போர் நிறுத்தத்துக்கு மத்தியஸ்தம் செய்த எகிப்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஜனவரி 19 அன்று அமலுக்கு வந்த போர் நிறுத்தத்தை அப்பட்டமாக மீறிய செயல். இந்தத் தாக்குதல்கள் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கு கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜோ பைடன் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை நீக்கினார் டொனால்ட் ட்ரம்ப்



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு சேவையை தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நீக்கியுள்ளார்.

55 வயதான ஹண்டர் பைடன் மற்றும் 43 வயதான ஆஷ்லி பைடன் ஆகியோர், 30 இற்கும் மேற்பட்ட இரகசிய சேவை முகவர்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் அமெரிக்க ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியிருந்த நிலையில் சில மணி நேரங்களுக்குள் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 19.03.2025




இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். வளர்ச்சிக்கான வாய்ப்பு உள்ளது. இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனளிக்கும்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். நீங்கள் பணிகளை விரும்பிச் செய்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகம் மூலம் இலாபமும் ஆதாயமும் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று முன்னேற்றகரமான நாள். உங்கள் இலக்குகளை அடையும் ஆற்றல் மிகுந்து காணப்படும்.உங்கள் பேச்சாற்றல் காரணமாக நீங்கள் பிரபலமாவீர்கள்.

பணியிடச் சூழல் முன்னேற்றகரமாக இருக்கும். உங்கள் திறமைகள் மூலம் நீங்கள் பிரகாசிப்பீர்கள். பணியில் வெற்றி பெற வேண்டும் என்ற மனநிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் செயல்களின் மூலம் உங்கள் துணையைத் திருப்திப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று உபரிப் பணம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் நேர்மறையான எண்ணம் உங்கள் ஆரோக்கியத்தை நல்ல முறையில் பராமரிக்க உதவும்.




இன்று சராசரிக்கும் சற்று மேலான பலன்களை எதிர்பார்க்கலாம். உங்கள் இலக்கை அடைய நீங்கள் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

பணியில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். இறுதியில் உங்கள் நேர்மையான முயற்சியால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

சில சமயங்களில் உங்கள் துணையிடம் பொறுமையின்றிக் காணப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் பேண பொறுமை அவசியம்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். என்றாலும் தேவையற்ற கூடுதல் செலவுகள் ஏற்படும்.

முதுகு மற்றும் மூட்டுக்களில் விறைப்புத் தன்மை ஏற்படும். குளிர்ச்சியான பொருள்களைத் தவிர்க்கவும்.




இன்று சூழ்நிலைகள் சவால்கள் நிரம்பியதாக இருக்கும். உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். தகவல் தொடர்புக் குறைபாடு காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி கிடைப்பது கடினமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். பணியில் வளர்ச்சி காண நீங்கள் மிகுந்த முயற்சியும் கடின உழைப்பும் கொள்ள வேண்டும்.

நீங்கள் அமைதியின்றி காணப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனால் புரிந்துணர்வு குறையும்.

இன்று பணப்புழக்கம் குறைவாக இருக்கும். நீங்கள் வரவையும் செலவையும் விவேகத்துடன் கையாள வேண்டும்.




இன்று சிறப்பான சூழ்நிலை காணப்படும். உங்கள் ஆற்றலும் உற்சாகமும் அதிகரித்து காணப்படும். உங்கள் சுய முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக முடிக்கும் திறமை உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் உரையாடும் போது அமைதியான அணுகுமுறை வேண்டும். இந்த அணுகுமுறை நல்ல சூழ்நிலையை உருவாக்கும்.

போதிய பணம் காணப்பட்டு நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நீங்கள் புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியத்தைப் பராமரிப்பீர்கள்.




இன்று பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இன்று உங்கள் இலக்குகளை அடைய உங்கள் அதிர்ஷ்டம் சாதகமாக இருக்காது. என்றாலும் உங்கள் அணுகுமுறையில் பொறுமையும்உறுதியும்தேவை. இன்றுசிலசௌகரியங்களை விட்டுக் கொடுக்காமல் இருக்க உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிட வேண்டும்.

பணியிடச் சூழல் சவால்கள் நிறைந்து காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

குடும்பப் பிரச்சினைகள் சிலவற்றை நீங்கள் எதிர் கொள்ள நேரும். இதனால் உங்கள் துணையுடனான நல்லுறவு பாதிக்கப்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு குறைவு.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. எந்தவொரு செயலையும் யோசித்து செய்வதன் மூலம் எதிர்மறை விளைவுகளை தடுக்கலாம். மனதை பொழுது போக்கு விஷயங்களில் செலுத்துங்கள்.

கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணிகளில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள பணிகளை கவனமுடன் திட்டமிட வேண்டும்.

இருவரிடையே நிலவும் தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் சில விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரலாம்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகளை இன்று நீங்கள் சந்திக்க நேரலாம்.அதனைக் கடினமாக உணர்வீர்கள்.

தூக்கமின்மை காரணமாக இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். தெய்வீக இசை கேட்பது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல.

பணியிடத்தில் பதற்றம் காணப்படும். சகபணியாளர்களின் மூலம் தொல்லைகள் ஏற்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். பெண் ஊழியர்களிடத்தில் கவனமாக இருக்கவும்.

மோசமான புரிந்துணர்வின் காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே வாக்குவாதம் ஏற்படும். எனவே உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாக அணுகுவது நல்லது.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இன்று பண இழப்பு ஏற்படும் என்பதால் பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.03.2025




இன்று நன்மைகள் விளையும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைவீர்கள். இன்றைய செயல்களை திறமையாக ஆற்ற திட்டமிட வேண்டியது அவசியம்.

பணிகள் அதிகமாக காணப்பட்டாலும் நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பீர்கள். பணிகளை தன்னம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள்.குடும்பத்தில் நிகழும் சுப நிகழ்ச்சியில் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் திருப்தியை அளிக்கும். இருக்கும் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். கஷ்ட நேரங்களில் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் செயல்களின் முடிவுகளின் நிச்சயமற்ற தன்மை காணப்படும்.

பணியில் வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். என்றாலும் குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினை காணப்படும். அது இன்றைய நாளின் மகிழ்ச்சியான சூழ் நிலையை பாதிக்கும்.

இன்று நிதிவளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்காது.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் புத்திசாலித்தனத்தைக் கொண்டு நீங்கள் நிறைய சாதிக்கலாம். உங்கள் சுய முயற்சி மூலம் உங்கள் செயல்களில் வளர்ச்சி காண்பீர்கள். புதுமையான முறையைக் கையாள்வதன் மூலம் நீங்கள் உங்கள் இலக்குகளில் வெற்றி பெறலாம்.

பணிகள் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகள் தரம் நிறைந்ததாக இருக்கும். இதனால் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். சமூகமான சூழ்நிலை காரணமாக பரஸ்பர அன்பும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று அதிக பணவரவு காணப்படும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் இருக்காது. மின் சாதனங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை. வாகனம் ஓட்டும் போது கவனம் தேவை. தியானப் பயிற்சி ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் சவால்களை சந்திக்க திறமையாக திட்டமிட வேண்டும். பணிகளை மேற்கொள்ளும் போது நீங்கள் தவறு செய்ய நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக மந்தமான மன நிலை காணப்படும். உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

வீட்டை நவீனமாக்க முயல்வீர்கள். ஆனால் போதிய பணம் கையில் இருக்காது. எதிர்கால செலவுகளுக்காகப் பணத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் காணப்படும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகச் செலவு செய்ய நேரும். இது உங்களுக்குச் சற்றுக் கவலையை அளிக்கும்.




# தேசபந்து தென்னகோனின் சொத்துக்களை அடையாளங்காணும் நடவடிக்கை ஆரம்பம்

பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனின் சொத்துக்களை அடையாளங்காணும் மற்றும் பட்டியலிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக சில குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை கைது செய்வதற்கான ஒன்றிணைந்த சுற்றி வளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பதில் பொலிஸ் மாஅதிபரின் நேரடி கண்காணிப்பில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைக்கு புலனாய்வு பிரிவின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேசபந்து தென்னகோன் கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருப்பதற்கு உதவுபவர்களும் கைது செய்யப்படவுள்ளனர்.